# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை – 2 –2020–தரம் 11
## Holiday Worksheet - 2 – 2020 –Grade 11

| வணிகக்கல்வியும் கணக்கீடும் | 60 | T | I,II | மூன்று மணித்தியாலம் 3 hours |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No | | | | |

**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

### பகுதி – I

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

**1தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான விடையினைத் தெரிவு செய்க**

பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 – 2 வரையான வினாக்களுக்கு விடை தருக.

ரமணன் என்பவர் கடந்த பத்து வருட காலமாக பிரபல்யமான ஒரு பாடகர் ஆவார். தன்னுடைய இசைக்குழுவை யாழ் ரமணன் என்ற பெயரில் ஆரம்பித்ததுடன் இலங்கையில் அனைத்து நகரங்களிலும் இசைக்கச்சேரிகளை நடத்தி வந்துள்ளார். எதிர்காலத்தில் அவர் தன்னுடைய பாடல்களை உள்ளடக்கிய இறுவட்டு (CD) ஒன்றை வெளியிட எதிர்பார்த்துள்ளார்.

01. ரமணன் என்பவரால் நிறைவேற்றப்படும் தேவை மற்றும் அதற்கான விருப்பத்தைக் கொண்டது.
    1. தொடர்நாடகம், இசைக்கச்சேரி
    2. பொழுதுபோக்கு, சினிமா
    3. இசைக்கச்சேரி,பொழுதுபோக்கு
    4. பொழுதுபோக்கு, இசைக்கச்சேரி

02. மேற்படி யாழ் ரமணன் இசைக்குழுவானது
    1. தர்மஸ்தாபனம்
    2. சேவை வழங்கும் வணிகம்
    3. பொருள் உற்பத்தி வணிகம்
    4. இலாப நோக்கற்ற வணிகம்

03. நியாயமான சம்பளத்தை பெறுவதற்காகவும் தொழிற்பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதையும் நோக்கமாகக் கொண்டு வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர்
    1. சமூகம்
    2. அரசு
    3. ஊழியர்கள்
    4. முகாமையாளர்

04. வணிகம் ஒன்றின் சூழலைக்கற்பதன் மூலம் இனங்காணக்கூடிய பலவீனம், அச்சுறுத்தல் முறையே
    1. போட்டியாளர்கள் உருவாதல் மற்றும் நிதிப்பலம் குறைவாக இருத்தல்
    2. போட்டியாளர்கள் வெளியேறுதல் மற்றும் ஊழியர்களின் பிரச்சனை
    3. நிதிப்பலம்குறைவாக இருத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெயர் இருத்தல்
    4. நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தாமை மற்றும் போட்டியாளர் உருவாகுதல்

05. பின்வருவனவற்றுள் ஒரு நிறுவனத்தின் பிரிவுகளிடையே தொடர்புகளைப் பேண பயன்படுத்தக் கூடிய தொடர்பாடல் சாதனம் எது?
    1. கடிதங்கள்
    2. இணையம்
    3. இன்ரர்கொம்
    4. அறிவித்தல் பலகை

06. “சரண்ராஜ்” கட்டடப் பொருள் விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பித்து அதன் முகாமைத்துவ நடவடிக்கைகளை தாமே கொண்டு செல்வதற்கு எண்ணுகின்றார். இதற்கு மிகவும் பொருத்தமான வணிக அமைப்பாக இருப்பது
    1. தனியாள் உரிமை வணிகம்
    2. பங்குடமை வணிகம்
    3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
    4. சங்க வகையான அமைப்பு

07. இலங்கை வங்கியின் நடைமுறைக்கணக்கொன்றின் உரிமையாளரான ரமேஸ் என்பவரால் சுரேஸ் என்பவரின் பெயருக்கு ரூபா 15000 ற்கு காசோலை ஒன்றைக் கொடுத்தார். சுரேஸ் இக்காசோலையை புறக்குறிப்பிட்டு நரேசுக்கு ஒப்படைத்தார். நரேஸ் அக்காசோலையை மக்கள் வங்கியில் தனது கணக்கில் வைப்புச் செய்தார். இக்காசோலையின் கட்டளையை பெறுபவர்
1. மக்கள் வங்கி 2. ரமேஸ் 3. இலங்கை வங்கி 4. நரேஸ்

08. பின்வருவனவற்றுள் சிறப்புக்குறுக்கு கோடாக அமைவது
1.




09. ஆயுட்காப்புறுதிக்கு பொருந்தாத காப்புறதித்தத்துவமாக அமைவது
1. உயர் நம்பிக்கை 2. இழப்பீட்டு தத்துவம்
3. காப்புறுதி செய்யக்கூடிய உரிமை 4. நட்டஈடு பெறுதல்

10. போக்குவரத்தின் அடிப்படை மூலங்களை ஒழுங்குமுறையாகக் கொண்ட தொகுதி
1. போக்குவரத்து ஊடகம், வழி, தரிப்பிடம், சக்தி
2. வழி, போக்குவரத்துஊடகம், சக்தி, தரிப்பிடம்
3. சக்தி, வழி, தரிப்பிடம், போக்குவரத்து ஊடகம்
4. தரிப்பிடம், போக்குவரத்துஊடகம், சக்தி, வழி

11. திட்டமிட்ட செயன்முறையை அமுல் படுத்தும் போது வணிகத்தில் உள்ள மனித வளங்களை பொருத்தமான முறையில் மிகச்சிறப்பாக வழிப்படுத்தல் செயன்முறையை அழைப்பது
1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. நெறிப்படுத்தல் 4. கட்டுப்படுத்தல்

12. உற்பத்திப் பொருள் ஒன்றின் விலையை தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான உருப்படி
1. வடிவம் 2. கிரயம்
3. பொதி 4. மேலதிக கொடுப்பனவு

13. வணிகமொன்றின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களில் முகாமையாளர்களின் நோக்கம் ஒன்று அல்லாதது
1. தொழில் அபிவிருத்தி செய்தல்
2. முகாமைத்துவ தீர்மானங்களை செயற்படுத்தல்
3. வணிக நோக்கத்தை நிறைவேற்றத் தேவையான முகாமை தீர்மானங்களை எடுத்தல்
4. எதிர்கால வணிக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்

14. தொடர்பாடல் செயன்முறைக்குரிய வரைபடம் வருமாறு



மேற்தரப்பட்ட A, B, C இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகள் எவை?

1. செய்தி, துலங்கல், ஊடகம்
2. ஊடகம், செய்தி, துலங்கல்
3. செய்தி, ஊடகம், துலங்கல்
4. ஊடகம், துலங்கல் , செய்தி

15. சரியான கணக்கீட்டுச்சமன்பாட்டைக் கொண்டது

1. உரிமை = சொத்துக்கள் - பொறுப்புக்கள்
2. சொத்துக்கள் = உரிமை – பொறுப்புக்கள்
3. பொறுப்புக்கள் = சொத்துக்கள் + உரிமை
4. உரிமை = சொத்துக்கள் + பொறுப்புக்கள்

16. கீழே வணிகமொன்றில் நிகழ்ந்த சந்தா்ப்பங்கள் தரப்பட்டுள்ளன.

A – 100Kg பருப்பு சில்லறை வியாபாரிக்கு விற்பனை செய்தல்
B – ஆடை தைப்பவர் கூலிக்கு ஆடைகளை தைத்தல்
C – ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கட்டடமொன்றை அமைப்பதற்கு தேவையான மணல் கியூப் 50 விற்பனை செய்தல்

மேற்கூறிய வியாபாபரத்தில் மொத்த வியாபாரத்தில் உள்ளடங்குபவை

1. Aயும் B யும் 2. Aயும் Cயும் 3. Bயும் Cயும் 4. Aயும் Bயும் Cயும்

17. கணக்கீடு என்றால்

1. வணிகமொன்றின் இலாபத்தை அல்லது நட்டத்தை கணிக்கும் செயற்பாடாகும்.
2. துணை ஏடுகளில் பதிவு செய்வதுடன் இலாப நட்டங்களையும் கணிக்கும் செயற்பாடாகும்
3. கொடுக்கல் வாங்கல்களை ஏடுகளில் பதிவு செய்யும் செயற்பாடாகும்
4. வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்ள பயனுள்ள தகவல்களை வழங்கும் செயன்முறை ஆகும்.

18. நடவடிக்கை ஒன்றிற்கான இரட்டைப்பதிவு கீழ்வருமாறு

கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 8000ரூபா
காசு கணக்கு செலவு 8000ரூபா

மேற்படி நிறுவனத்தில் இடம்பெற்ற நடவடிக்கை எதுவாக இருக்கும்

1. கடன் கொடுத்தோரிடம் பெற்ற கழிவு ரூபா 8000.
2. காசுக்கொள்வனவு ரூபா 8000
3. கடன் கொள்வனவு ரூபா 8000
4. கடன் கொடுத்தோருக்கு செலுத்திய காசு 8000

19. இரட்டைத் தொழிற்பாட்டை மேற்கொள்கின்ற மூல ஏடுகள் ஆவன

1. வங்கிக்கணக்கும் விற்பனை நாட்குறிப்பும்
2. கொள்வனவு நாட்குறிப்பும், வங்கிக் கணக்கும்
3. காசேடும், பொதுநாட்குறிப்பும்
4. வங்கிக்கணக்கும் காசேடும்

20. சொத்தில் குறைவையும், உரிமையில் குறைவையும் ஏற்படுத்தக் கூடியதுமான கொடுக்கல் வாங்கல் ஒன்று

1. மேலதிக மூலதனமுடன்
2. கடன் கொடுத்தோருக்கு காசு செலுத்துதல்
3. இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்தல்
4. மின்சாரக்கட்டணம் செலுத்துதல்

21. இராஜன் வணிகத்தில் 2018 சனவரி மாதத்திற்கான ரூபா 5000 மின்சாரக்கட்டணம் செலுத்தப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலை பதிவு செய்வதற்கு உரிய மூல ஆவணமும், மூல ஏடும் முறையே

1. காசுப்புத்தகம் - கைச்சாத்து
2. கொடுப்பனவுக் கைச்சாத்து – பொதுநாட்குறிப்பேடு
3. கொடுப்பனவு கைச்சாத்து – சில்லறைக்காசேடு
4. கொடுப்பனவுகைச்சாத்து – காசுப்புத்தகம்

22. 2018.03.31 மணியம் வணிகத்தின் செம்மையாக்கிய வங்கிக் கணக்கின் வரவு மீதி ரூபா 12500 ஆகவும் இத்தினத்தின் வங்கிக்கூற்று மீதி ரூபா 13500 ஆகவும் காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்கான கொடுக்கல் வாங்கல் வருமாறு
   1. வங்கியால் அறவிட்ட வங்கிக்கட்டணம் ரூபா 1000
   2. வழங்கப்பட்ட போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 1000
   3. வங்கியால் நிலையான கட்டளையின் பெயரில் செலுத்தப்பட்ட காப்புறுதிக்கட்டணம் ரூபா 1000
   4. கடன்பட்டோரிடமிருந்து வங்கிக்கு கிடைத்த நேரடி வைப்புக்கள் ரூபா 1000 ஆகும்

23. கீழேதரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ரம்மியா வணிகத்தில் இடம்பெற்றன. ரகு என்ற கடன் பட்டோரிடமிருந்து ரூபா 4500 காசு கிடைத்ததுடன் குறைக்கப்பட்ட கழிவுத்தொகை ரூபா 500 ஆகும். இக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டைப்பதிவு முறையே

   1.. கடன்பட்டோ் கணக்கு வரவு ரூபா 5000
   காசுக் க/கு செலவு ரூபா5000

   2. கடன்பட்டோா் கணக்கு வரவு 4500
   கொடுத்த கழிவு கணக்கு வரவு ரூபா 500
   காசுக்கணக்கு செலவு ரூபா 5000

   3. கொடுத்த கழிவுக்கணக்கு வரவு ரூபா 500
   காசுக்கணக்குசு வரவு ரூபா 4500
   கடன்பட்டோா் கணக்கு செலவு ரூபா 5000

   4. கடன் பட்டோா் கணக்கு வரவு ரூபா 4500
   காசுக்கணக்கு செலவு 4500

24. பின்வருவன சேமிப்பு கணக்கினதும் நடைமுறைக்கணக்கினதும் நன்மைகளின் பட்டியலாகும்
   A – காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்
   B – வைப்புச் செய்வதன் மூலம் வட்டி பவருமானத்தைப் பெறலாம்
   C – வைப்புச் செய்வதன் மூலம் வட்டி வருமானத்தை பெற மூடியாது
   D – கடனட்டை மூலம் கொடுப்பனவுகளை செய்ய முடியும்
   E – வங்கி மேலதிக பற்று வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்
   நடைமுறைக்கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு பெறக்கூடிய நன்மையை கொண்ட விடை யாது?
   1. Aயும் Bயும் C   2. Aயும் Bயும் D   3. Aயும் Cயும் Dயும்   4. Aயும் Cயும் Eயும்

25. வணிகமொன்றில் காணப்படும் பலம், பலவீனம் என்பவற்றை முறையாகக் காட்டும் விடை எது?
   1. அதிவேக வீதிகளை நிர்மாணித்தல், இயற்கை அனர்த்தங்கள்
   2. புதிய உற்பத்திமுறைகளைப் பயன்படுத்தல், புதிய நகரங்களை உருவாக்குதல்
   3. முகாமையாளரின் அனுபவங்கள், பணியாளர்களின் எதிர்மறை மனப்பாங்கு
   4. போதியளவு மூலதனம் காணப்படுதல், பயிற்சி பெற்ற பணியாளர்கள் போதாமை

26. வணிகமொன்றின் மொத்த இலாபத்தைக் கணிப்பது
   1. விற்பனை – மொத்த செலவு   2. விற்பனை – விற்பனைக் கிரயம்
   3. விற்பனை – கொள்வனவு   4. மொத்த வருமானம் - மொத்த செலவு

27. நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற நடவடிக்கை கீழ்வருமாறு
   முரளிக்கு கடன் விற்பனை ரூபா 5000. மேற்படி நடவடிக்கைக்கான மூல ஆவனத்தையும், முதன்மை ஏட்டையும் தெரிவு செய்க.
   1. கொடுப்பனவுக் கைச்சாத்து, விற்பனை நாளேடு
   2. பொதுநாட்குறிப்புக் கைச்சாத்து, விற்பனை நாளேடு
   3. விற்பனை நாளேடு, விற்பனைப்பட்டியல்
   4. விற்பனை பட்டியல், விற்பனை நாளேடு

28. 31.10.2017இல் யமுனா நிறுவனத்தின் சில்லறை காசேட்டின் பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத் தொகை கீழ்வருமாறு
   பிரயாணச் செலவு ரூபா 270
   உபசரணைச்செலவு ரூபா 520
   காகதாகிகள் செலவு ரூபா 290

தபால் செலவு ரூபா 60
31.10.2107 சில்லறைக் காசேட்டு மீதி 360.
31.10.2017இல் மீள்நிரப்ப வேண்டிய தொகை யாது?
1. ரூபா 780 2. ரூபா 1860 3. ரூபா 1140 4. ரூபா 1500

29. கீழ்வரும் பேரேட்டுக்கணக்குகளில் பொதுவாக காணப்பட முடியாத கணக்கு மீதியைக் கொண்ட கூற்றினைத் தெரிவு செய்க
1. வங்கிக்கடன் கணக்குச் செலவு மீதியாக அமைதல்
2. முதலீட்டுக்கணக்கு வரவு மீதியாக அமைதல்
3. கடன் பட்டோர்கணக்கு செலவு மீதியாக அமைதல்
4. பெற்ற கழிவுக்கணக்கு செலவு மீதியாக அமைதல்

30. தொங்கல் கணக்கில்பதிவு செய்யப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல் ஒன்று
1. உடன் காசுக் கொள்வனவு ரூபா 1000 இருமுறை கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருத்தல்
2. மின்கட்டணம் ரூபா 2000 செலுத்தியது காப்புறுதி கட்டணக்கணக்கின் வரவு வைக்கபட்டடிருத்தல்
3. தொலைபேசிக்கட்டணம் செலுத்தியது ரூபா 5000 காசுக்கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருத்தல்
4. விற்பனைப்பட்டியல் ரூபா 10000 ஆனது விற்பனை நாட்குறிப்பேட்டில் ரூபா 12000 என பதிவு செய்யப்பட்டிருத்தல்

31. இயந்திரம் ஒன்றின் கிரயம் ரூபா 100000 பயன்படுகாலம் 5 வருடங்களாகும். எஞ்சிய பெறுமதி ரூபா 20000 இச் சொத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு யாது?
1. ரூபா 24000 2. ரூபா 40000 3. ரூபா 20000 4. ரூபா 10000

32. விநியோகச் செலவுகளை மட்டும் கொண்ட செலவுத் தொகுதியாவது
1. கொடுத்த கழிவு, அறவிடமுடியாக்கடன், விநியோக வான் தேய்மானம், விளம்பரம், தபாற்கட்டணம்
2. விளம்பரம், அறவிடமுடியாக்கடன், கொடுத்தகழிவு, விநியோக வான் தேய்மானம், விற்பனைத்தரகு
3. தபாற் செலவு கொடுத்தகழிவு அறவிட முடியாக் கடன், கொடுத்த விற்பனை தரகு, விற்பனை ஊழியர் சம்பளம்
4. கொடுத்த கழிவு, அறவிட முடியாக் கடன், விற்பனைத்தரகு, விற்பனை ஊழியர் சம்பளம்,பெற்ற கழிவு

33. குறித்த ஒரு நாளில் வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு காணப்பட்டது.
சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்
150000 = 100000 + 50000
ரூபா 25000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யும் போது கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை காட்டும் சமன்பாடு
1. 150000 = 100000 + 50000
2. 175000 = 125000 + 50000
3. 175000 = 100000 + 75000
4. 125000 = 100000 + 25000

34. வணிகமொன்றின் பிழையை திருத்திப் பதிந்த பொது நாட்குறிப்பேட்டுப்பதிவுகள்
கொடுத்த கழிவுக்கணக்கு வரவு 2500 ரூபா
பெற்ற கழிவுக்கணக்கு வரவு ரூ 2500
தொங்கல் கணக்கு செலவு ரூபா 5000
இதற்கு பொருத்தமான விளம்பல்

1. கொடுத்த கழிவு ரூபா 2500 உம் பெற்ற கழிவு ரூபா 2500உம் கூடுதலாகப் பதிந்தது
2. கொடுத்த கழிவு பெற்ற கழிவு கணக்கில் பதியாது திருத்தப்பட்டது.
3. பெற்ற கழிவு 2500 கொடுத்த கழிவுக்கணக்கில் பதிந்து திருத்தப்பட்டது.
4. கொடுத்தகழிவு 2500 பெற்ற கழிவுக்கணக்கில் பதிந்தது திருத்தப்பட்டது.

35. பொது நாட்குறிப்பேடு என்பது
   1. இரட்டைப்பதிவு முறையின் ஒரு பகுதியாகும்
   2. காசேட்டின் துணை நிரப்பியாகும்
   3. இரட்டை பதிவு முறையின் ஒரு பகுதி அல்ல
   4. ஏனைய முதன்மை ஏடுகளில் பதிய முடியாதவற்றை பதிவு செய்யப்பயன்படுத்தப்படுகின்றது.

36. காசுக்கழிவு என்பதன் கருத்தினை சிறப்பாக விளக்குவது.
   1. கடனுக்கு அன்றி காசுக்கு கொள்வனவு செய்யப்படும் போது வழங்கப்படுவது
   2. காசு அல்லது காசோலை மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது வழங்கப்படுவது
   3. காசோலை மூலமன்றி காசாகக் கொடுப்பனவை மேற் கொள்ளும் போது வழங்கப்படுவது
   4. முன்கூட்டிய இணங்கிய காலப்பகுதிக்குள் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது வழங்கப்படுவது.

**37 – 40 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்**

மகாலக்சுமி வணிகத்தின் 2015.12.31.இல் முடிவடைந்த ஆண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2015.01.01இல் அஇருப்பு | ரூ 15000 |
| உட்சுமைக்கூலி | ரூ 8000 |
| கொள்வனவுகள் | ரூ55000 |
| வாடகை (6 மாதத்திற்கு) | ரூ 12000 |
| பெற்ற கழிவு | ரூ 3000 |
| ஊழியர் சம்பளம் | ரூ10000 |
| விற்பனைகள் | ரூ107000 |
| வங்கிக்கட்டணம் | ரூ 3000 |
| வரிக்கட்டணம் | ரூ 2000 |
| 2015.12.31இல் இருப்பு | ரூ 12000 |

37. இவ்வணிகத்தின் விற்பனைக்கிரயம் யாது
   1. ரூ68000   2. ரூ 66000   3. ரூ80000   4. ரூ58000

38. இவ்வணிகத்தின் மொத்த லாபம்
   1. ரூ 49000   2. ரூ 41000   3. ரூ 27000   4. ரூ39000

39. செலவுகளின் மொத்த பெறுமதி
   1. ரூ 25000   2. ரூ 37000   3. ரூ 39000   4. ரூ 27000

40. இவ்வணிகத்தின் தேறிய லாபம்
   1. ரூபா 14000   2. ரூ 17000   3. ரூ2000   4. ரூ 3000

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட பகுதி – I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரண்டு வினாக்களையும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. கீழ்வரும் தகவல்களுக்கு அமைய வினா இலக்கம் 1 -10 வரயைிலான வினாக்களுக்கு விடை தருக.

ராதாவும் அவள் நண்பி கீதாவும் நெசவுக்கைத்தொழில் தொழிற்சாலை ஒன்றை தலா ரூ 40000 மூலதனமிட்டு 01.01.2017 இல் ஆரம்பித்தனா். அத்தொழிற்சாலைக்கு "சரஸ்வதி நுளம்புவலை உற்பத்திகள் வணிகம்" எனப் பெயரிட்டனர். சுகாதாரமானதும் உயர்தரமுடையதுமான நுளம்பு வலைகளை உற்பத்தி செய்வதற்கு அதிகளவு சனத்தொகையினைக் கொண்ட இடத்தில் கட்டடம் ஒன்றினை வாடகைக்கு எடுத்தனா். வாகனம் ஒன்றில் இடத்திற்கிடம் சென்று உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய தீா்மானித்தனர். 01.01.2017இல் வங்கி கடனாக ரூ60000 ஐ 10% வருடாந்த வட்டியில் பெற்றனா். தமது நிதி நிலைமைகளை உறுதிப்படுத்துவதற்காக விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தினை காசோலை மூலம் வங்கியில் வைப்புச் செய்ய வங்கியுடன் இணங்கியிருந்தனா். 2017 சனவரி மாதம் இடம்பெற்ற நடவடிக்கைகள் கீழ்வருமாறு

| விபரம் | ரூபா |
|---|---|
| காசுக்கொள்வனவு | 50000 |
| பிரயாணச்செலவுகள் | 20000 |
| இயந்திரக்கொள்வனவு | 60000 |
| கட்டட வாடகை | 4000 |
| மின்சாரக்கட்டணம் | 6000 |
| காசுக்கு விற்பனை | 100000 |
| கடன்விறபனை | 60000 |
| வங்கியில் வைப்பு | 40000 |

சனவரி மாதத்திற்கான வங்கிக்கடன் வட்டி செலுத்தப்பட்டுள்ளது. வருடத்திற்கான இயந்திரப் பெறுடமானத்தேய்வு 5% ஆகும்

1. அ. சரஸ்வதி நுளம்புவலை உற்பத்தி வணிகம் எவ்வகை வணிக ஒழுங்கமைப்புக்குள் உட்படுத்தப்புடுகின்றது? அவ்வணிகத்தின் பலம்களைக் குறிப்பிடுக.
   ஆ. சரஸ்வதி நுளம்புலை உற்பத்தி வணிகம் எங்கு பதிவு செய்யப்படவேண்டும்? பதிவு செய்யப்பட வேண்டிய சட்டம் யாது?
2. அ. காசோலைகள் வைப்புச் செய்யக்கூடிய வங்கி வகையின் பெயரினைக் குறிப்பிடுவதுடன் ஆரம்பிக்க பட வேண்டிய கணக்கு வகை யாது?
   ஆ. "சரஸ்வதி நுளம்பு வலை உற்பத்தி வணிகத்தின்" அனுகூலம் ஒன்றையும் பிரதிகூலம் ஒன்றையும் தருக.
3. அ. நடமாடும் வாகனத்தில் விற்பனை செய்தல் எவ்வகையான சில்லறை வியாபாரத்துக்குள் உள்ளடங்கும்?
   ஆ. சுகாதாரமானதும் உயர்தரமுடையதுமான நுளம்புவவலைகள் வழங்குதல் எவ்வகையான முகாமைத்துவ கருமமாகும்
4. சரஸ்வதி நுளம்புவலை உற்பத்தி வணிகத்தின் மேற்படி தகவல்களில் இருந்து அதன் விற்பனை விலையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக.
5. மேற்படி வணிகம் பராமரிக்க வேண்டிய இரண்டு முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.
6. 01.01.2017இல் இடம்பெற்ற இரண்டு நடவடிக்கைகளையும் கணக்கியல் சமன்பாட்டில் தருக?
7. அ. 01.01.2017 இல் பெறப்பட்ட வங்கிகக்கடனுக்கான இரட்டைப்பதிவினைத் தருக?
   ஆ. சனவரி மாதத்திற்கான வங்கிக்கடன் வட்டியையும் இயந்திரப் பெறுமானாத்தேய்வினையும் குறிப்பிடுக.
8. 31.01.2017இல் உள்ளவாறான காசுமீதி யாது?
9. அ. 2017 சனவரி மாதத்திற்கான தேறிய இலாபம் எவ்வளவு
   ஆ. 31.01.2107இல் உள்ளவாறான உரிமையினை கணிப்பிடுக.
10. 31.01.2107இல் உள்ளவாறான நடைமுறையில்லாச் சொத்துக்களின் தேறிய பெறுமதி யாது?

(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி – I
## வணிகக்கல்வி
## இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

02. i. அ. மனிததேவை, விருப்பத்துக்கான பண்பைத் தருக?
ஆ. வணிகத்தில் அக்கறை செலுத்தும் ஊழியர்களின் நோக்கங்களைக் குறிப்பிடுக (2புள்ளிகள்)

ii. கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக்கூறுக.
அ. வணிகத்தின் வளர்ச்சியானது வாடிக்கையாளரில் தங்கியுள்ளது ( )
ஆ. நோக்கத்தின் அடிப்படையில் வணிகத்தினை இலாப நோக்குள்ள, இலாப நோக்கற்ற வணிகம் என வேறுபடுத்தலாம் ( )
இ. வணிகத்துக்கு வழங்கபட்டும் வரிச்சலுகையானது வணிகத்துக்கு ஒரு பலமாகும்( )
ஈ. மொத்த வியாபாரத்தில் மட்டுமே புதிய உற்பத்திகளை சந்தையில் விற்கமுடியும்( )
(2புள்ளிகள்)

iii. தம்பதெனிய பிரம்பு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய பௌதீக வளங்களைக் கொண்ட பிரதேசமாகும். நிமல் அப்பிரதேசத்தில் வசிப்பவர் அவர் தனது திறனைக் கொண்டு பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்கின்றார். இவ் நடவடிக்கைக்காக நிதி நிறுவனம் ஒன்று அவருக்குகடன் வழங்க முன்வந்தது.
அ. இச்சம்பவத்தின் பலம் ஒன்றை தருக?
ஆ. இச்சம்பவத்தில் உள்ள வெளிவாரி சூழல் காரணி ஒன்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iv. அ. உற்பத்திக்காரணிகளை உதாரணத்துடன் தருக.
ஆ. அரசு வணிகத்தின் மீது சட்ட திட்டங்களை திணிப்பதற்கு காரணங்கள் யாவை? (2புள்ளிகள்)
(மொத்தம் 8 புள்ளிகள்)

03. i. அ. மொத்த வியாபாரத்துக்கும், சில்லறை வியாபாரத்துக்கும் இடையிலான வேறுபாடுகள்இரண்டு தருக.
ஆ. வியாபாரத்தின் துணைச்சேவைகள் 4 தருக?

ii. கீழ்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக்குறிப்பிடுக.
அ. காப்புறுதி செய்பவரின் ஒப்புதலின்படி சொத்துக்காப்புறுதிக் கொள்கை மதிப்பு நிர்ணயிக்கப்படுகின்றது ( )
ஆ. நடைமுறைக்கணக்கு ஆரம்பிபப்பவர்கள் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்வதற்குகாசோலைகளையும் கடன் அட்டைகளையும் பெற்றுக் கொள்ளலாம் ( )
இ. வங்கிகளும் முடி அலங்கார வணிகங்களும் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் அல்ல ( )
ஈ. ஏனைய வணிக அமைப்புகளுடன் ஒப்பிடுகையில் தனியார் நிறுவனங்களினதும் பங்குடமை நிறுவனங்களினதும் கூட்டுக்கட்டுப்பாடுகள் குறைவாகக் காணப்படுகின்றது. ( )
(2 புள்ளிகள்)

iii. மோகன் ஓர் துணி உற்பத்தி வியாபாரி ஆவார். இவர் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் ஓர் நடைமுறைக்கணக்கினைப் பேணுகின்றார். இவர் ரூபா 100000 ற்கு ஓர் காசோலையை நூல் மொத்த வியாபாரியாகிய றிஸ்வான் என்பவருக்கு 20.08.2017ல் வழங்கினார் இவர் அக்காசோலையில் "பெறுவோன் கணக்கு மட்டும்" என எழுதி குறுக்குக் கோடிட்டார்
அ. மெற்படி தகவல்களுக்கு அமைய காசோலை ஒன்றை வரைக
ஆ. குறுக்குக்கோடிடலின் இரு நன்மைகளைத் தருக. (2புள்ளிகள்)

iv. அமல், அருள் என்போர் கிளிநொச்சியில் வாழ்கின்றனர். அவர்கள் 10 விவசாயிகளை இணைத்துக் கொண்டு சமூக நல (பொதுநல) நோக்கில் ஒரு கூட்டுறவு வணிகத்தை ஆரம்பித்தனர். விவசாயிகளுக்கு கடன் வழங்குவதே இவர்களின் நோக்கமாகும்.
அ. மேற்படி வணிகம் எவ்வகை வணிக ஒழுங்கமைப்பாகும்?
ஆ. மேற்குறிப்பிட்ட வணிக ஒழுங்கமைப்பின் பண்புகளைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)
(மொத்தம் 8 புள்ளிகள்)

04. i. அ. முகாமைத்துவம் என்றால் என்ன?

ஆ. இலக்குச்சந்தை என்பதில் இருந்து நீர் விளங்குவது யாது?

(2புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா என்பதை குறிப்பிடுக.

அ. திட்டமிடல் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தும் போது தேவையான வளங்கள், பதவிகள், வேலைப்பகிர்வு என்பன தொடர்பான செயற்பாடு நெறிப்படுத்தலாகும். (      )

ஆ. மனித தேவைகள் விருப்பங்களை சந்தைக்கு முன்வைப்படுகின்ற பொருட்கள் மாத்திரம் உற்பத்தி எனப்படும். (      )

இ. ஒரே நாடு வேறொரு நாட்டிலிருந்து உற்பத்திப்பொருட்களை தமது நாட்டிற்கு கொண்டு வருதல் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும் (      )

ஈ. நிலையான வைப்புச் சான்றிதழை பிணையாக வைத்து வைப்பில் குறித்த சதவீதத்தை கடனாகப் பெறமுடியும் (      )

(2 புள்ளிகள்)

iii. பாடசாலை பைகளை உற்பத்தி செய்கின்ற வணிகமொன்று பின்பற்றுகின்ற வழிமுறைகள் பின்வருமாறு

1. உற்பத்தி செய்யப்பட் பாடசாலைப்பை நியமங்களுக்கு ஏற்புடையதா என பரீட்சித்தல்
2. பாடசாலை பைகளை தைக்கும் ஊழியர்களை இணைத்துக் கொள்ளல்
3. வங்கிக்கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தல்
4. பாடசாலை பைகளை தைக்கும் ஊழியர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்குகின்றார்.

மேற்குறித்த படிமுறைகளின் முகாமைத்துவ செயற்பாட்டை ஒவ்வொரு பணியின் கீழும் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

iv. ஜெயம் என்பவர் பாடசாலைக்கு அண்மையில் பாடசாலைப்புத்தகங்களையும் உபகரணங்களையும் விற்பனை செய்யும் விற்பனை அகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். அவரின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ரூபா 500க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு 10% வியாபாரக்கழிவும் விளையாட்டு உபகரணம் ஒன்றை வெற்றி கொள்ளக்கூடிய லொத்தர் சீட்டொன்றும் வழங்கப்படும்.

அ. ஜெயம் வணிகத்தின் இலக்குச் சந்தை எது?

ஆ. ஜெயம் விற்பனையை அதிகரிக்கும் நோக்கினை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தியுள்ள சந்தைப்படுத்தல் கலவை எம்மாறியைச் சேர்ந்தது. (2புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

**பகுதி – II கணக்கீடு**
**இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

05. i. அ. சொத்துக்கள் என்பதனை வரையறை செய்க.

ஆ. மயூரா நிறுவனத்தின் பின்வரும் நடவடிக்கைகளை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்னும் அடிப்படையில் வகைப்படுத்துக.

1. வங்கி மீவரையியல்
2. தளபாடம்
3. அட்டுறு செலவுகள்
4. சரக்கிருப்பு
5. கடன்பட்டோர்
6. வங்கிக்கடன்
7. முதலீடு
8. காசு மீதி (2 புள்ளிகள்)

ii. சிவா நிறுவனத்தின் 2015 மாசி மாதத்திற்கான கடன் கொள்வனவுகள் பற்றிய தகவல்கள் கீழ் வருமாறு

| திகதி | பட்டியல் இலக்கம் | வழங்குனர் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2015.02.05 | 33 | குமார் | 10000 |
| 2015.02.10 | 34 | குகன் | 12000 |
| 2015.02.15 | 37 | குபேரன் | 8000 |
| 2015.02.25 | 39 | குமரன் | 14000 |

2015 மாசி மாதத்திற்கா ன கொள்வனவு தினசேரியைத் தயாரிக்குக. (2 புள்ளிகள்)

iii. அ. 2016 மார்ச் மாதம் யோகன் நிறுவனத்தில் இடம்பெற்ற கீழ்வரும் நடஎடிக்கைகள் கணக்கியல் சமன்பாட்டில் உமக்கு தரப்படுகின்றது.

| நடவடிக்கை | சொத்துக்கள் | உரிமை | பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| 1 | -45000 | | -45000 |
| 2 | +10000 | +10000 | |
| 3 | -30000 | +5000 | |
| | +35000 | | |
| 4 | +70000 | | |
| | -70000 | | |

உம்மிடம் வேண்டப்படுவது மேற்படி கணக்கியல் சமன்பாட்டிற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பெறுமதியுடன் தருக.

ஆ. பின்வரும் விடயங்களுக்கு இரட்டைப்பதிவு தத்துவத்தை குறிப்பிடுக.

1. சொத்து 2. செலவீனம் (4 புள்ளிகள்)

iv. பாலன் நிறுவனம் சில்லறை காசேட்டினை பராபரிக்கின்றது.
2016 நவம்பர் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றது

| திகதி | விபரம் | ரூபா |
|---|---|---|
| 2016.11.01 | பிரதமகாசாளரிடமிருந்து பெற்ற காசு | 1250 |
| 2016.11.03 | பிரயாணச் செலவுகள் | 100 |
| 2016.11.07 | காகிதாகிகள் | 50 |
| 2016.11.10 | தபாற்செலவுகள் | 40 |
| 2016.11.13 | உபசரணைச்செலவுகள் | 120 |
| 2016.11.16 | முத்திரை | 30 |
| 2016.11.20 | மோகனுக்கு கொடுத்தது | 150 |
| 2016.11.24 | பேரூந்துக் கட்டணம் | 100 |
| 2016.11.30 | பேனை வாங்கியது. | 30 |

மேற் சொன்ன தகவல்களை தபாற் செலவு, பிரயாணச் செலவு உபசரணைச்செலவு, அலுவலகச் செலவு மற்றும் பேரேட்டு நிரல்களுடைய சில்லறைக் காசேட்டினை தயாரிக்கும் படி வேண்டப்படுகின்றீர் (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06. i. அ. வழுக்களைச் சீராக்குவதற்கான முதன்மை ஏடு எது?
ஆ. விற்பனையால் பெற்ற காசோலை ரூபா 10000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. இதற்கான இரட்டைப்பதிவினை தருக? (2 புள்ளிகள்)

ii. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஏட்டினையும் மூல ஆவனத்தையும் தருக.
1. செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 15000
2. மீள் விற்பனைக்காக கடனாகக் கொள்வனவுசெய்யப்பட்ட பொருட்கள் ரூபா 50000
3. வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் ரூபா 50000
4. குகனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி ரூபா 25000

(2புள்ளிகள்)

iii. சுரங்க வணிகத்தின் 2015 சனவரி 31ம் திகதி வங்கிக்கணக்கின் மீதி ரூபா14500 ஆகும் வங்கிக்கூற்று மீதி வேறுபட்டது. வேறுபாட்டிற்குரிய காரணங்கள் பின்வருமாறு
1. சனவரி மாதத்தில் வைப்பிலிட்டதாயினும் இதுவரையில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூபா 4200
2. இம்மாதத்தில் வழங்கப்பட்டதாயினும் இதுவரை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 3700
3. வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக்கட்டணம் ரூபா 100
4. நிலையியல் கட்டளையின் அடிப்படையில் வங்கியின் மூலம் செலுத்திய காப்புறுதிக்கட்டணம் ரூபா 1200
5. வங்கிக்கு கடன் பட்டோர் நேரடியாக வைப்பிலிட்டது. ரூபா 2500

வேண்டப்படுவது
அ. சீராக்கிய வங்கிகக்கணக்கு
ஆ. 2015.01.31ம்திகதி உள்ளவாறான மீதி அறிய வங்கிக்கணக்கு இணக்க கூற்றினைத்தயாரிக்க

(4 புள்ளிகள்)

iv. தம்ரோ நிறுவனத்தில் 2018.01.31ம் திகதி தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை எனவே வித்தியாசத் தொகை தொங்கல் கணக்கின் செலவுப் பக்கத்தில் 1300 பதிவு செய்யப்பட்டு பரீட்சை மீதி சமப்படுத்தப்பட்டது. பின்வரும் பேரேட்டுக்கணக்குகளை பரீட்சித்த போது பின்வரும் தவறுகள் கண்டு பிடிக்கபட்டது.
அ. கொடுத்த கழிவு ரூபா 1200 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை
ஆ. கொடுத்த வாடகை ரூபா 1250 இரு கணக்குகளிலும் வரவுப்பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.
இ. கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா 1000 உரிய கணக்குளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.
வேண்டப்படுவது
1. வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டு பதிவுகள்
2. தொங்கல் கணக்கு (4 புள்ளிகள்)

(மெடாத்தம் 12 புள்ளிகள்)

07. i. அ. பரீட்சை மீதி என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?

ஆ. இலாப நோக்கற்ற நிறுவனங்கள் நிதிபெறும் வழிகள் இரண்டினைத் தருக? (2புள்ளிகள்)

ii. அபிராமி வணிகத்தின் 2018ஆம் ஆண்டு தொடபான தகவல்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| 01.01.2018 இல் மூலதனம் | ரூ 500000 |
| ஆண்டுக்கான வருமானம் | ரூ100000 |
| ஆண்டுக்கான செலவினங்கள் | ரூ 50000 |
| மேலதிக மூலதனம் இட்டது | ரூ 200000 |

31.12.2018இல் இவ்வணிகத்தின் உரிமை யாது? (2புள்ளிகள்)

iii. 31.12.2018இல் அருண் சில்லறை வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு

| | வரவு (ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|
| தளபாடம் | 200000 | |
| தளபாடப் பெறுமான தேய்வுஏற்பாடு (01.01.2018) | | 50000 |
| சரக்கிருப்பு (01.01.2018) | 30000 | |
| கொள்வனவுகள் | 120000 | |
| விற்பனைகள் | | 200000 |
| கடன்பட்டோர் | 14000 | |
| கடன்கொடுத்தோர் | | 16000 |
| கொடுத்த கழிவு | 3000 | |
| பெற்ற கழிவு | | 2000 |
| தெலைபேசிக்கட்டணம் | 5000 | |
| அறவிடமுடியாக்கடன் | 2000 | |
| வங்கிக் கடன் | | 50000 |
| பெற்ற வாடகை | | 6000 |
| காசுமீதி | 99000 | |
| வங்கிக்கடன் வட்டி | 1000 | |
| மூலதனம் | | 150000 |
| | 474000 | 474000 |

மேலதிக தகவல்கள்

- 31.12.2018இல் இருந்தவாறான சரக்கிருப்பு ரூபா 18000
- தளபாடத்திற்கு வருடாந்தம் நேர்கோட்டுமுறையில் 10% பெறுமானம் தேய்வு செய்யப்படுதல் வேண்டும்
- 31.12.2018 அட்டுறு தொலைபேசிக்கட்டணம் ரூபா 1000 வேண்டப்படுவது

அ. 31.12.2018இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று (4 புள்ளிகள்)

ஆ. 31.12.2018இல் இருந்தவாறான நிதிநிலைமை கூற்று (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)